# மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,
மாவட்ட நீதிபதி

**2025–ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 16–ஆம் நாள் புதன்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2056 ஆனித் திங்கள் 32–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.232/2015 –ல்**

**இடைநிலை மனு எண்.6/2025**

**பாஸ்கரன் (எ) சுப்ரமணியம்**
**Rep.by his power agent S.கனிமொழி ... மனுதாரர்/வாதி.**

**–எதிர்–**

**1. M.சின்னபையன்**
**2.கலா**
**3.ராஜேந்திரன்**
**4.குமார்**
**5.செல்வி**
**6.அரவிந்த்**
**7.சேகர் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்.**

இந்த மனு 09.07.2025-ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு.S.V.சிவக்குமார்** அவர்களும் 04 முதல் 06-வரையிலான எதிர்மனுதாரர்கள் முதலேற்பு வழக்கில் தோன்றாத் தரப்பினர்களாக உள்ள நிலையில் 01-ஆம், 02-ஆம் எதிர்மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு.V.பொன்முடி** அவர்களும் 03, 07-ஆம் எதிர்மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு.N.சுரேஷ்** அவர்களும் தோன்றி எடுத்துரைத்த வாதங்களை கேட்டும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையில் இருந்துவந்த இந்த மனுவில் இந்த நீதிமன்றம் இன்று ஆணை பிறப்பிக்கிறது.

## ஆணையுரை

மனுதாரர்/வாதி 03-ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியிடமிருந்து கிரயம் வாங்கிய பிரிபடாத 50 சென்ட் நிலத்தை முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்படும் நேர்வில் மனுதாராார்/வாதிக்கு ஒதுக்க வேண்டும் என்று வழக்குரையில் பரிகாரம் கோரி திருத்துவதற்கு அனுமதி அளிக்க கோரி உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் **06–**ஆம் வகுமுறையின் **17**-ஆம் விதியின்கீழ் இந்த மனு தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்**

01. மனுதாரர் முதலேற்பு வழக்கில் வாதி ஆவார். வழக்குச் சொத்தில் 1/6 பாகத்திற்கு பாகப்பிரிவினை கோரி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது மனுதாரர் முதலேற்பு வழக்கைத் தாக்கல்செய்துள்ளார். 22.06.2015-ஆம் தேதியன்று 03-ஆம் பிரதிவாதி ராஜேந்திரனுக்கும் அவருடைய மகளுக்கும் வழக்குச் சொத்தில் உரிமையான 1/4 பங்கு பிரிபடா பாகத்தில் இருந்து 50 செண்ட் நிலத்தை மனுதாரர்/வாதி கிரயம் வாங்கியுள்ளார். இந்த வழக்கு அனுமதிக்கப்பட்டு மனுதாரர்/வாதியின் 1/6 பாகத்திற்கு தீர்ப்பாணை பிறப்பிக்கப்படும் நேர்வில் அவர் 03-ஆம் பிரதிவாதியிடமிருந்து வாங்கிய 50 சென்ட் பிரிபடா இடத்தையும் வாதிக்கு ஒதுக்கி முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டும். அந்தப் பரிகாரத்தை வழக்குரையில் புகுத்த வழக்குரையில் திருத்தம் செய்வதற்கு மனுதாரர்/வாதியை அனுமதிக்க வேண்டும்.

**எதிருரையின் சுருக்கம்**

02. 02-ஆம் எதிர்மனுதாரர் தாக்கல்செய்த எதிருரையை 01-ஆம் எதிர்மனுதாரர் ஏற்றுக்கொண்டுள்ளார். 2015-ஆம் ஆண்டே 03-ஆம் பிரதிவாதியிடமிருந்து 50 சென்ட் பிரிபடா பாகத்தை வாங்கிய மனுதாரர்/வாதி 10 ஆண்டுகள் கழித்து ஏற்றுக்கொள்ளத்தக்க காரணங்கள் எதுவும் சொல்லாமல் தாக்கல் செய்துள்ள இந்த மனு நிலைநிற்கத்தக்கதல்ல. வழக்கு விசாணை தொடங்கிய பிறகு மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனு ஏற்புடையதல்ல. மனுதாரர் கோரும் இந்த திருத்தம் அவசியமற்றது. ஆகையால், மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

03. 04 முதல் 06-வரையிலான எதிர்மனுதாரர்கள் முதலேற்பு வழக்கில் தோன்றாத் தரப்பினர்களாக உள்ளனர். 03, 07-ஆம் எதிர்மனுதாரர்கள் எதிருரை தாக்கல்செய்யவில்லை.

**தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்**

**04. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?**

**தீர்முடிவு**

05. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. மனுதாரர்/வாதி வழக்குச் சொத்தில் 1/6 பாகத்திற்கு பாகப்பிரிவினை கோரி முதலேற்பு வழக்கை தாக்கல்செய்துள்ளார். 22.06.2015-ஆம் தேதியன்று 03-ஆம் பிரதிவாதியிடமிருந்து மனுதாரர்/ வாதி 50 சென்ட் பிரிபடா நிலத்தைதான் வாங்கியுள்ளார். இந்த வழக்கில் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கும் நேர்வில் 03-ஆம் பிரதிவாதி

ராஜேந்திரனுக்கு ஒதுக்கப்படும் சொத்தில் தான் (மனுதாரர்/வாதி) கிரயம் வாங்கிய 50 சென்ட் பிரிபடா பாகத்தை இந்த வழக்கில் பிறப்பிக்கப்படலாகும் முதல்நிலைத் தீர்ப்பாணையில் தனக்கு ஒதுக்க வேண்டும் என்று கோருவது ஏற்புடையதல்ல. அவ்வாறு வழங்க முற்படுவது குழப்பத்தையே விளைவிக்கும். ஆகையால், இந்த மனுவை அனுமதிக்க முகாந்திரம் இல்லை என்றும் மனுதாரர் அனுமதி கோரும் திருத்தம் இந்த வழக்கை முடிவுசெய்ய அவசியம் அற்றது என்றும் இந் நீதிமன்றம் முடிவு செய்கிறது. இந்த மனுவை தள்ளுபடி செய்வதால் மனுதாரருக்கு எவ்வித அநீதியும் விளையாது என்று இந் நீதிமன்றம் கருதுகிறது.

**இறுதிமுடிவு**

06. இறுதியாக, இந்த மனு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படுகிறது.

**இந்த ஆணையுரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025—ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 16—ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

**(ஒப்பம்) வே.புகழேந்தி,**
**மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

**இணைப்பு:—** இல்லை

உண்மை/வரைவு ஆணையுரை
இ.ம.எண்.06/2025 in மு.வ.எண்.232/2015
நாள் 16.07.2025